**செய்தி வெளியீடு எண் : 1006** **நாள் : 20.07.2024**

**தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் சென்னை எழிலகத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் மாநில அவசரகால செயல்பாட்டு மையம் உள்ளிட்ட பல்வேறு திட்டப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (20.7.2024) சென்னை எழிலகம் முதன்மை கட்டடத்தின் தரைதளத்தில், ரூ.5.12 கோடி மதிப்பீட்டில் பல்துறை ஒருங்கிணைப்பு அரங்கம், கட்டுப்பாட்டு அறை, பேரிடர் கண்காணிப்பு மற்றும் பேரிடர் தாக்கம் குறித்த முன் அறிவிப்பு மையம், கூட்ட அரங்கம் ஆகியவற்றுடன் கூடிய மாநில அவசரகால செயல்பாட்டு மையம் அமைக்கப்பட்டு வரும் பணிகள் மற்றும் முதல் தளத்தில் Realtime Flood Forecasting Centre அமைக்கப்பட்டு வரும் பணிகள் ஆகியவற்றை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு இப்பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, இராயபுரம் மண்டலம், வார்டு–59, வ.உ.சி. சாலை, சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் அருகில் உள்ள இலவச பொதுக்கழிப்பிடத்தினைப் பார்வையிட்டு அதன் பராமரிப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டார், கழிப்பறையினை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், நீர்வளத்துறையின் சார்பில் கொளத்தூர் மற்றும் மாதவரம் பகுதியில் உள்ள தணிகாசலம் நகர் உபரிநீர் கால்வாயினை ரூபாய் 91.36 கோடி மதிப்பில் அகலப்படுத்தி மேம்படுத்தும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, இப்பணியினை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ச்சியாக, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் கொளத்தூர், பெரியார் நகர், 12வது தெருவில் பயன்பாட்டில் உள்ள 150 மி.மி. விட்டமுள்ள கழிவுநீர் கட்டமைப்பு குழாய்களை ரூ.44.26 கோடி மதிப்பில் 250 மி.மி 300 மி.மி 400 மி.மி. குழாய்களாக 17,443 மீ. நீளத்தில் மாற்றி கழிவுநீர் சேகரிப்பு அமைப்பை மேம்படுத்தும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, கொளத்தூர், திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட பெரவள்ளூர் கே5 காவல்நிலையக் கட்டடத்தினைப் பார்வையிட்டு, இந்தக் கட்டிடத்தினை இடித்து அகற்றி விட்டு புதிதாக கூடுதல் காவல் துணை ஆணையாளர் அலுவலகம் மற்றும் காவல் நிலையக் கட்டடம் கட்டுவது தொடர்பாக ஆய்வு செய்தார்.

**ஆய்வின்போது, செய்தியாளர் சந்திப்பில் தலைமைச் செயலாளர் அவர்கள் தெரிவித்ததாவது:**

கடந்த வருடம் பெய்த வடகிழக்குப் பருவமழையில் எதிர்பாராத மழையின் காரணமாக சென்னை மற்றும் தமிழ்நாட்டின் தெற்குப் பகுதிகளில் மழைநீர்த்தேக்கம் காணப்பட்டது. இந்த வருடம் வடகிழக்குப் பருவமழையில் நீர்த்தேக்கம் ஏற்படாத வண்ணம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, சென்னை எழிலகத்தில் உள்ள மாநில பேரிடர் கட்டுப்பாட்டு மையத்திற்கு மாற்றாக சென்னை எழிலகம் முதன்மை கட்டடத்தின் தரைதளத்தில், 11 ஆயிரம் சதுர அடியில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் புதிதாக மாநில அவசரகால செயல்பாட்டு மையம் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் Real time data இங்கு சேகரிக்கப்படும்.

இதன் முதல் தளத்தில் 5000 சதுர அடியில் Realtime Flood Forecasting Centre ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், 2000 சதுர அடியில் ஊடக மையம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த மையமானது Satellite, தொலைபேசி இணைப்பு, தொடர்பு பணிகளுக்கான வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தப் பணிகள் முடிவுற்றால் அனைத்துத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஒருங்கிணைப்புப் பணிகள் ஒரே இடத்தில் மேற்கொள்ளப்பட்டு பணி சிறப்பாக அமையும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில், மாநகராட்சி சார்பாக 19 இடங்களில் பரவலாக்கப்பட்ட பேரிடர் நிவாரண மையங்களும் (Decentralised Disaster Relief Centres), அரசின் சார்பாக மண்டல பேரிடர் மையங்கள் 4 இடங்களிலும் அமைக்கப்பட உள்ளது. எதிர்பாராத அளவிற்கு பெய்யும் மழையினை எதிர்கொள்ளும் வகையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், நிவாரணப் பணிகளுக்கு தேவையான உபகரணங்கள், பணியாளர்கள் மற்றும் மீட்புப் பணிகளுக்கு படகுகள், பொதுமக்கள் தங்கவைக்கப்படவுள்ள நிவாரண மையங்கள் போன்ற பணிகள் சம்பந்தப்பட்ட இடங்களில் தயார் நிலையில் வைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இதுதொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டு, வடகிழக்குப் பருவமழையினை எதிர்கொள்ளும் வகையில் துறைகள் வாரியாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், தயார் நிலையில் உள்ள நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்து, தகுந்த ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாநிலம் முழுவதும் ஒவ்வொரு துறைகள் வாரியாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பணிகள் குறித்த விவரங்களுக்கான கலந்தாய்வுக் கூட்டம் இரண்டு மூன்று வாரத்திற்குள் நடத்தப்படும். குறிப்பாக, தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த வருடம் பெய்த மழைபோல் இந்த வருடம் பெய்தால் அதனை எதிர்கொள்ளும் வகையில் என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என இந்தக் கலந்தாய்வு கூட்டத்தில் விளக்கப்படும்.

Realtime Flood Forecasting Centre சார்பில் உதாரணமாக, சென்னை மாநகரில் உள்ள பூண்டி, செம்பரம்பாக்கம் உள்ளிட்ட அனைத்து ஏரிகளிலும் மழைப்பொழிவின் விவரம், ஏரியின் பரப்பளவு, அங்குள்ள நீரின் கொள்ளளவு, ஏரியில் ஏற்கனவே உள்ள நீரின் அளவு, மழைப்பொழிவின் காரணமாக வருகின்ற நீரின் அளவு, அதன் காரணமாக ஏரியிலிருந்து வெளிவரும் நீரின் அளவு ஆகியவற்றை முன்னேற்பாடாக கணக்கெடுத்து, எவ்வளவு மழைப்பொழிவு இருந்தால் எந்தளவிற்கு எந்தெந்த பகுதிகளில் மழைநீர் வருவதற்கு வாய்ப்புள்ளது என்பது தெரிய வரும். இந்த மையம் இரண்டு அல்லது மூன்று வாரத்திற்குள் செயல்பாட்டிற்கு வரும்.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தென்சென்னை மற்றும் மத்திய சென்னை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் நிலவரம் குறித்து கடந்த வாரம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இன்று வடசென்னை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் பணிகள் நடைபெறும் இடங்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் மேம்பாலப் பணிகள் நடைபெறும் இடங்களில் தேங்கும் மழைநீரினை எவ்வாறு வெளியேற்றலாம் என தொழில்நுட்பத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் விவரத்தின் அடிப்படையில் மழைநீர் தேங்காவண்ணம் நீரினை உடனுக்குடன் வெளியேற்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தலைமைச் செயலாளர் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது, வருவாய் நிருவாக ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.எஸ்.கே.பிரபாகர், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., செயல் இயக்குநர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர்கள் திரு.கே.ஜெ.பிரவீன்குமார், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு) மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu